கன்னியாகுமரி மாவட்டம்
பளுகல் பேரூராட்சி

ந. க. எண். 25/ 2010/அ1 நாள் : 09.06.2010

## அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 2010 – 2011
## ஒப்புநோக்கு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு

1. கன்னியாகுமரி மாவட்டம் பளுகல் பேரூராட்சியில் அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 2010 – 2011 –ன் கீழ் பணிகளை செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் தகுதியான ஒப்பந்தகாரர்களிடமிருந்து அட்டவணையில் குறிப்பிட்ட பணிகளுக்கு பளுகல் பேரூராட்சி செயல் அலுவலரால் பகிரங்கமாக பெற்றுக்கொள்ள வரவேற்கப்படுகின்றன.

2. பணிகளுக்குரிய ஒப்பந்த படிவங்களை 24.06.2010 வியாழக்கிழமை 5.30 மணி வரை அலுவலக நேரத்தில் உரிய தொகையினை பளுகல் பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

3. ஒவ்வொரு பணிகளுக்கும் அதன் எதிரே குறிப்பிட்டுள்ள டேவணித் தொகையை ரொக்கமாகவோ அல்லது வரைவோலையாகவோ செயல் அலுவலர், பளுகல் பேரூராட்சி என்ற முகவரிக்கு செலுத்தப்பட வேண்டும்.

4. ஒப்பந்தப்புள்ளிகளை பளுகல் பேரூராட்சி செயல் அலுவலராலோ அல்லது அவரது அதிகாரம் பெற்றவராலோ 25.06.2010 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை பளுகல் பேரூராட்சி செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் வருகை தந்துள்ள ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் அன்றைய தினம் பிற்பகல் 3.30 மணிக்கு திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாள் விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டால் அதற்கு அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு அன்றைய தினம் திறக்கப்படும்.

5. இதர விவரங்கள் அலுவலக வேலை நாட்களில் வேலை நேரங்களில் நேரடியாக கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (லட்சத்தில்) | டேவணித் தொகை (ரூ) | ஒப்பந்தப்புள்ளி படிவத்தின் விலை (ரூ) |
|---|---|---|---|---|
| 1 | மத்தம்பாலை மூவோட்டுகோணம் செல்லும் சாலை தார்தளம் அமைத்தல் | 12.00 | 12000.00 | 3744.00 |
| 2 | குழிவிளாகம் ஆலத்துவிளாகம் ரோடு காங்கிரீட் தளம் அமைத்தல். | 5.00 | 5000.00 | 1560.00 |
| 3 | கண்ணுமாமூடு சந்தையில் காய்கறி கடைகள் கட்டுதல் | 20.00 | 20000.00 | 6240.00 |
| 4 | அனைத்து வார்டுகளிலும் கம்பி இழுத்து தெருவிளக்கு அமைத்தல் | 5.00 | 5000.00 | 1560.00 |
| 5 | கண்ணுமாமூடு தினசரி சந்தையில் ஒரு லட்சம் தண்ணீர் கொள்ளளவு கொண்ட மேல் நிலை நீர் தேக்க தொட்டி கட்டுதல். | 10.00 | 10000.00 | 3120.00 |

குறிப்பு: 1) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையால் வெளியிடப்பட்ட பொறியாளர் கையேட்டில் குறிப்பிட்டுள்ள தகுதியுடைய ஒப்பந்தக்காரர்கள். 2) ஒப்பந்தப்புள்ளி தொடர்பான நிபந்தனைகள் வேலை நாட்களில் பேரூராட்சி அலுவலகத்தில் தெரிந்து கொள்ளலாம். மேலும் விபரங்களுக்கு http://townpanchayats.tn.gov.in/tender இணையதளத்தில் பார்க்கலாம்.

[signature] 9/6/10
செயல் அலுவலர்
பளுகல் பேரூராட்சி

பெறுநர்

1. பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்களுக்கு.
2. அலுவலக விளம்பர பலகை.
3. உதவி இயக்குனர் பேரூராட்சிகள் அவர்களின் தகவலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.
4. உதவி செயற்பொறியாளர் பேரூராட்சிகள் அவர்களின் தகவலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.
5. மேல்புறம் ஊராட்சி ஒன்றியம் மற்றும் அதற்குட்பட்ட பேரூராட்சிகள்.